Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 28    (12-01-1993)    செவ்வாய்க்கிழமை    ஓசை 829

## கடந்த வருடம் 10,000 பேர் படையை விட்டு ஓட்டம்

இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸிலிருந்து தப்பியோடியவர்கள் கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 10,000 ஐ எட்டியிருப்பதாகவும், மேலும் தப்பியோடுபவர்களின் எண்ணிக்கையை குறைக்க அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. இதேவேளை நாசகார செயல்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இராணுவத்திலிருந்து விலகியோடிய ஒருவரை நம்புக்கண பொலிசார். கைது செய்திருப்பதாகவும், மாகோ, ஹோமகம, எம்பிலிப்பிட்டிய பகுதிகளிலும் இத்தகைய கைதுகள் இடம் பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# அரசிற் கெதிராக மாபெரும் பேரணி

# பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டனர்

## யாழ். செயலகம் முன் மறியல்

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா அரசு தமிழீழ மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொண்டுவரும் பொருளாதாரத் தடை மற்றும் பல்வேறு அடக்குமுறைகள், அட்டூழியங்கள், ஆயுதப்படைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்கள் ஆகியவற்றைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்ட மாபெரும் கண்டன பேரணியும், மறியல் போராட்டமும் நடைபெற்றன.

சிறிலங்கா அரசு கடந்த 32 மாதகாலமாக தமிழீழ மக்கள் மீது முப்படைகளையும் பயன்படுத்தி கண் மூடித்தனமான தாக்குதல்களை நடாத்திவருகின்ற அதே வேளையில் திட்டமிட்ட பொருளாதாரத் தடை, எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றின் மீதான தடை, போக்குவரத்துத்தடை ஆகியவற்றுடன் உணவு. கல்வி, சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறை சார்ந்த தேவைகளை தமிழீழ மக்களுக்கு வழங்குவதில் தடைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது.

இவ்வாறான சிறிலங்கா அரசின் தடை நடவடிக்கைகளால் இரண்டரை வருடங்களுக்கு மேலாக தமிழீழ மக்கள் சொல்லொனாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர் அரசின் இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்று பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் முகமாக ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தினர்.

பல்வேறு தொழிற்சங்கங்கள், பொதுசன அமைப்புகள், பொதுஸ்தாபனங்கள், உட்பட தமிழீழத்தின் சுமார் 50 வெகுஜன அமைப்புக்களின் தொண்டர்கள், மற்றும் இடம்பெயர்ந்த மக்கள், பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்கள் ஆகியோர் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் இக் கண்டனப் பேரணியில் கலந்து கொண்டனர். இக் கண்டனப் பேரணியை தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

நேற்றுக் காலை குடாநாட்டின் அனைத்துப் பகுதியில் இருந்தும் அலை அலையாக அணிதிரண்டு வந்த மக்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலை அடைந்தனர் அங்கிருந்து சுமார் 11.00 மணியளவில் கண்டனப் பேரணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தடைகள் போட்டால் தன்னாட்சி நம்கைக்கு மாறும்

(யாழ்ப்பாணம்)

''தடைகள்போட்டால் தன்னாட்சி நமது கைக்குமாறும்'', ''ஆயுதங்களால் செய்ய முடியாததை அரிசியால் செய்ய முடியுமா'' இவை நேற்று யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற சிறிலங்கா அரசுக்கு எதிரான கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் ஆவேசம் கொண்டு எழுப்பிய கோசஊர்வலத்தில் கோசங்களில் சில.

இக் கண்டனப் பேரணியில் எழுப்பப்பட்ட மேலும் சில கோசங்கள் வருமாறு

''உழைக்கும் வழிகளைத் தடை செய்தால் பிழைக்கும் வழிகளை நாம் காண்போம்''

''வாழுமிடங்களை அழித்


(4 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் வாகனத்தை மாடுகள் இழுத்துச் சென்றன


''எரிபொருள் தீர்ந்துவிட்ட மோட்டார் வாகனம் ஒன்றை இரண்டு காளை மாடுகள் இழுத்துச் சென்றன'' வாகனத்தின் முன் பக்கத்தில் 'சிறிலங்கா அரசே எரிபொருள்

குட்பட்ட சிறுவன் ஒருவனை அவசர அவசரமாக வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற மோட்டார் சைக்கிள் எரிபொருள் தீர்ந்து விட்டதால் அரை வழியில் நின்று விட்

## மக்கள் போராட்டத்தை



நல்லூரில் நேற்றுக் காலை ஆரம்பமாகிய வெகுஜனப் பேரணியில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.



டமிட்ட பொருளாதாரத் தடை, எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றின் மீதான தடை, போக்குவரத்துத்தடை ஆகியவற்றுடன் உணவு, கல்வி, சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறை சார்ந்த தேவைகளை தமிழீழ மக்களுக்கு வழங்குவதில் தடைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது.

இவ்வாறான சிறிலங்கா ... கண்டித்து நேற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் முகமாக ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தினர்.

பல்வேறு தொழிற்சங்கங்கள், பொதுசன அமைப்புகள், பொதுஸ்தாபனங்கள், உட்பட தமிழீழத்தின் சுமார் 50 வெகுஜன அமைப்புக்களின் தொண்டர்கள், மற்றும் இடம்பெயர் ... பேரணியை தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

... கிருந்து சுமார் 11.00 மணியளவில் கண்டனப் பேரணி

(4 ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரில் நேற்றுக் காலை ஆரம்பமாகிய வெகுஜனப் பேரணியில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

## மோட்டார் வாகனத்தை மாடுகள் இழுத்துச் சென்றன

''எரிபொருள் தீர்ந்துவிட்ட மோட்டார் வாகனம் ஒன்றை இரண்டு காளை மாடுகள் இழுத்துச் சென்றன'' வாகனத்தின் முன் பக்கத்தில் 'சிறிலங்கா அரசே எரிபொருள் தடையை நீக்கு' என்றகோசம் எழுதப்பட்டிருந்தது இக்காட்சியை நேற்று யாழ். நகரில் நடைபெற்ற சிறிலங்கா அரசுக்கெதிரான கண்டனப் பேரணியின் ஆரம்பத்தில் காணக்கூடியதாக இருந்தது.

எரிபொருள் தீர்ந்துவிட்ட மோட்டார் சைக்கிள்களை மிதிவண்டிகள் இழுத்துச்சென்றதையும், ஆபத்தான நோய்க்குட்பட்ட சிறுவன் ஒருவனை அவசர அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற மோட்டார் சைக்கிள் எரிபொருள் தீர்ந்து விட்டதால் அரை வழியில் நின்று விட்டது. நோயின் கடுமை காரணமாக சிறுவன் மரணமடைகிறான். சிறுவனின்சடலத்தை மட்டுமே அந்த மோட்டார் சைக்கிளில் வைத்து தள்ளிச் செல்ல முடிந்தது இச் சம்பவத்தை சித்திரிக்கும் வகையிலான ஊர்தி ஒன்றையும் நேற்றைய பேரணியின் முன்னால் காணக்கூடியதாகவிருந்தது. (க)

## தடைகள் போட்டால் தன்னாட்சி நம்கைக்குமாறும்

(யாழ்ப்பாணம்)

''தடைகள்போட்டால் தன்னாட்சி நமதுகைக்குமாறும்'', ''ஆயுதங்களால் செய்ய முடியாததை அரிசியால் செய்ய முடியுமா'' இவை நேற்று யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற சிறிலங்கா அரசுக்கு எதிரான கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் ஆவேசம் கொண்டு எழுப்பிய கோசங்களில் சில.

### ஊர்வலத்தில் கோசம்

இக் கண்டனப் பேரணியில் எழுப்பப்பட்ட மேலும் சில கோசங்கள் வருமாறு

''உழைக்கும் வழிகளைத் தடை செய்தால் பிழைக்கும் வழிகளை நாம் காண்போம்''

''வாழுமிடங்களை அழித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் போராட்டத்தை நான் மதிக்கிறேன்

(யாழ்ப்பாணம்)

''அரசின்நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்ட உணர்வையும், போராட்டத்தையும் நான் மதிக்கிறேன்''. இவ்வாறு நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணியின் இறுதியில் கையளிக்கப்பட்ட மகஜரைப் பெற்றுக்கொண்ட யாழ். மேலதிக அரசாங்கஅதிபர் திருமதி பத்தினியம்மா கூறினார்.

### மேலதிக அரச அதிபர்

மகஜரைப் பெற்றுக்கொண்டதும் செயலக முன்றலில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்

(4 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப்புலிகளால் நேற்றுவிடுவிக்கப்பட்டசிறிலங்கா பொலிஸைச் சேர்ந்த எட்வேர்ட்பெரேராவுடனும், தடுத்துவைக்கப்பட்டுள்ள ஏனைய பொலிஸாரின் ஒரு பகுதியினருடனும் ஆயர்கென்னத்பெர்னாண்டோ

# சிங்களப் பொலிஸார் இருவர் புலிகளால் நேற்று விடுவிப்பு

(நமது நிருபர்)

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நல்லெண்ண முயற்சியாக விடுதலைப் புலிகளின் காவலிலிருந்த இரு சிங்களப் பொலிசார் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ். நகரில் வைத்துநேற்று மாலை 6-30 மணியளவில் விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களால் இரு சிங்கள யுத்தக்கைதிகளும் ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோவிடம் கையளிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவர் கண்டியைச் சேர்ந்த ஏ. எம். எல். பண்டாரா (வயது 44) ஒரு பிள்ளையின் தந்தை ஆவார். இவர் சிறிலங்கா பொலிஸ் சார்ஜன்ட் என்பது குறிப்பிடத் தக்கது. மற்றவர் கேகாலையைச் சேர்ந்த எட்வேட் பெரேரா (வயது 40) ஆவார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் பொலிஸ் ஜீப் சாரதியாவார். இவர்கள் இருவரும் ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தில்கடமையாற்றியவர்கள். இக்கைதிகள் விடுதலையின்போது விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், வணக்கத்திற்குரிய கலாநிதி ரியான்சி பெரேரா, வணக்கத்திற்குரிய ஜெயக்குமார், டாக்டர் ஜெயக்குலராஜா ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

## பிரபாகரனின் காருணியம் கண்டு மகிழ்ச்சியுறுகிறேன்

### ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின்காருணியத்தையும் தியாகமனப்பான்மையையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று மாலை நடைபெற்ற சிறிலங்கா பொலிஸ் யுத்தக் கைதிகளின் விடுதலை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்: நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை மிகவும் நல்லதொரு சந்தர்ப்பத்தில் சந்தித்தேன். அவரை இச்சந்தர்ப்பத்தில் சந்தித்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இச்சந்திப்புகள் தொடர்பாக நான் கொழும்பு சென்றதும் சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளேன்.

தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பின் போது இரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் அக்கறையீனம் வருத்தத்தை தருகிறது

### விடுதலையாகிய பொலிஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''எமது விடுதலை தொடர்பாக இதுவரை காலமும் சிறிலங்கா அரசாங்கம் அக்கறை காட்டாதது வருந்தத்தக்கது. தொடர்ந்தும் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலைக்கு என்னாலான சகலவற்றையும் செய்வேன்'' என நேற்று மாலை புலிகளால் விடுவிக்கப்பட்ட சிறி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மட்டக்களப்பில் மோதல் 6படைபலி;12புலிகள்வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொஸ்கலை சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் காலை 7-13 மணிக்கு விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியாகினர்.

கொஸ்கலை முகாமிலிருந்து தம்பிட்டி இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்தவென விடுதலைப் புலிகள் போராளிகள் காத்திருந்தனர். அவ்வேளையில் இராணுவத்தினர் வழமையான பாதையை மாற்றி விடுதலைப் புலிகளுக்கு பின் புறமாக வந்தனர் இவர்கள் மீது விடுதலைப் புலிகள் 15 நிமிட நேரம் நடாத்திய தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியாகினர், அவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம்மோதலில் 12 விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

- ★ ரி 56 புதியரக துப்பாக்கி -5
- ★ ஏ. கே. மகசின் - 4
- ★ நடுத்தர ரவைகள் - 545
- ★ ஏ. கே. கோல்சர் - 4
- ★ புகைக் குண்டு - 1
- ★ இராணுவ பட்டி - 4
- ★ தண்ணீர் கான் - 1

வீரச்சாவடைந்த 12 போராளிகளின் விபரம் வருமாறு:-

மேஜர் தவமோகன் / சதீஸ் தம்பிமுத்து தவராஜா - கிண்ணையடி, வாழைச்சேனை.

கப்டன் ராஜேந்திரன் / சேது சீனித்தம்பி விஜயரட்ணம்- பெரியநீலாவணை, கல்முனை

2 ஆம் லெப்டினன்ட் குணதாஸ் சதாசிவம் ஜெயக்குமார் - மயிலம்பாவெளி, தன்னாமுனை.

2 ஆம் லெப்டினன்ட் சேர


( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மீட்பு நிதி சேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

இதுவரை தமிழீழ மீட்பு நிதியைச் செலுத்தத் தவறியவர்கள் நாளை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 3.30 மணி வரை நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் மீட்பு நிதியினை செலுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## 90-ம் நாள் நினைவஞ்சலி



| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 21 | 15 |
| 01 | 10 |
| 1933 | 1992 |

அமரர்

### திரு. செல்லையா நடராசா

செய்தவம் வீணாச்சோ தெய்வமெனாம்
கைவிடுத்து மறைந்ததுவோ
வையகத்தில் மின்னாமல் இடியிடித்தவாறு
மறைந்ததேனோ; மனைவி மக்கள்
கையெடுத்துக் கும்பிட்டோம் நாம் ஐயோ! ஐயோ!!
கவலை பெரிதாகி உலகம் காடாய்ப் போச்சே
இறைவன் செய்ய திருவடி போய்ச் சேர்ந்த உன்றன்
சேய்கள் நாம் செய்வ தொன்றறிகிலோமே

ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

5, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(சி/5705)

## பாரதி தாசன் கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L93** சனி ஞாயிறு வகுப்புகள்

மீட்டல்; வினாவிடை

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| வர்த்தகம்:- | பசில் |
| அளவையியல்:- | S. S. மனோகரன் |
| கணக்கியல்:- | சௌந்தி |
| தமிழ்:- | திருமதி மீரா |
| இந்துநாகரிகம்:- | பாலா |
| புவியியல்:- | யோசப் |
| அரசியல்:- | பஞ்சாட்சரம் |
| கிறீஸ்தவம்:- | கொலின்ஸ் |

ஆரம்பம் :- 16-01-93 சனி 7.00 A.M

ஒரு குறிப்பிட்டளவு வெளிமாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுமாதலால் முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
[சி-5730]

# வடக்கு - கிழக்கு இணைப்பு துண்டிக்கப்படக் கூடாது

## சுதந்திரக்கட்சி எம். பி. கருத்து

[கொழும்பு]

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமெனவும், சிறீனிவாசனின் யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை எனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட மீ. டபிள்யூ. ராஜரட்ணம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இந்திய பாணியிலான சமஷ்டி அமைப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், ஏனெனில் அத்தகைய அமைப்பின் கீழ் மத்திய அரசு நினைத்த மாத்திரத்தில் மாகாண அரசுகளைக் கலைத்துவிட முடியும் எனவும் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஏன் இணைக்கப்பட வேண்டுமென்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் ஆகக்குறைந்தது கடந்த நூறு வருடங்களாவது வடக்கும், கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக இருந்துள்ளது என்றும், 1958, 1977, 1983 கலவர காலங்களில் தமிழ் மக்கள் இந்தப் பகுதிகளில் தான் தஞ்சம்புக நேர்ந்தது என்றும், 1972, மற்றும் 1978-ன் அரசியலமைப்புகள் இப் பிரதேசத்தில் தமிழ் மக்களின் மொழியுரிமையைபபேண உறுதியளித்துள்ளன என்றும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டே உள்ளனஎன்றும் குறிப்பிட்டார். அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்தும் அதே நிலையில் பேணப்பட வேண்டும் என்பதுடன் அரச உதவியுடன் திட்டமிட்ட முறையில் நடத்தப்படும் குடியேற்றத் திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த மாதம் 30-ம் திகதி திரு. வே. கந்தையா தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. சி அன்ரன், உபதலைவர்கள் திரு. கி. துரைசிங்கம், திரு. சி மகேந்திரன், செயலாளர் திரு. மா. தங்கராசா, உப செயலாளர் திரு. அ. வின்சன், பொருளாளர் திரு. க. செல்வராஜா ஆகியோருடன் ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (22)

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இயங்கும் புங்குடுதீவு பாரதி சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் திரு சி. பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. நா. சிறிஸ்கந்தராஜா, உபதலைவர் திரு. வ. செல்வராஜா, செயலாளர் திரு பி. தி. திருநாவுக்கரசு, உபசெயலாளர் திரு வ. இரத்தினசிங்கம், இணைப்பொருளாளர்கள் திரு. ப. அருணகிரிநாதன் திரு. சி. பரமலிங்கம் ஆகியோருடன் ஆறுபேர் கொண்ட நிர்வாகசபை ஒன்

## நினைவு கூருகின்றோம்

**1993-01-12**

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம் - நீர்வேலிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

ஜெயந்தன் / பேபிஅருணா [செல்வச்சாமி தணிகேசன் - இல. 39, ராசவீதி, கல்வியங்காடு - யாழ்ப்பாணம்]

1989 ஆம் ஆண்டு திருக்கோணமலை - மூதூர், முட்டுச்சேனைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். சின்னவன் [தம்பிராசா கனகரத்தினம் - பூநகர் - திருக்கோணமலை]

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினரால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட - நாட்டுப் பற்றாளரான -

க. செல்வராசா சின்னத்துரை [பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு - யாழ்ப்பாணம்]

1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - பலாலி முகாமிலிருந்து குப்பிளான் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

மதனி [கமலநாயகி செல்வராசா - ஆலையடி வீதி, வந்தாறுமூலை - மட்டக்களப்பு]

1992 ஆம் ஆண்டு வவுனியா, புளியங்குளம் - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ஜெசிந்தன் / நாவுக்கரசன் (துரைராசா கௌரிசங்கர் - மன்னார் வீதி, வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (இ-5679)

### மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல தினிசுகளில் விற்பனைக்குண்டு வர்ணக் கலர்களில் பதிப்பித்தும் படங்கள் தனியாகவும், சிலிப் தனியாகவும், பெற்றுக்

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும்
அமரர்கள் வித்துவான் சி. ஆறுமுகம், தேவன் - யாழ்ப்பாணம்
ஆகியோர் ஞாபகார்த்தக்
# கவிதை, பேச்சுப் போட்டிகள் 1993




உங்கள் கடிகாரங்களை ரேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

## மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல தினிசுகளில் விற்பனைக்குண்டு வர்ணக் கலர்களில் பதிப்பித்தும் படங்கள் தனியாகவும், சிலிப் தனியாகவும், பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். (3921)

## வியாபாரிகட்கு

உள்நாட்டு வெளிநாட்டு அழகு சாதன பொருள்களும், லேஸ், தையல் பொருள்கள், எவர் சில்வர், ஸ்கூல் ரவலிங், ஹான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள் விளையாட்டுப்பொருள்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ள, ஜெயா அழகு சாதன மாளிகை 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3954)

## வெளிவருகிறது

கவிஞர் சரசாலையூரானின் "சோலைக்குயில்" சிறுவர் பாடல்கள் நூல் வெளிவருகிறது. இந்நூல்சிறுவர்களிற்கான புதிய பாடல்களைத் தாங்கி, இதுவரை வெளிவராத புதிய அமைப்பினைகொண்டு வெளிவருகிறது. உங்கள்பிரதிகளிற்கு இன்றே முந்துங்கள் ஏக விநியோகஸ்தர்கள் "ஆனந்த்ஸ்" புத்தக நிலையம் மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (3979)

## சோதிடம் பொய்க்காது

ஜாதகம் எழுத, பலனறிய, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேலணை சோதிடர் V A சிவராசா, 152B அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (3982)


---

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும்

அமரர்கள் வித்துவான் சி. ஆறுமுகம், தேவன் - யாழ்ப்பாணம்

ஆகியோர் ஞாபகார்த்தக்

# கவிதை, பேச்சுப் போட்டிகள் 1993



வித்துவான்

**சி. ஆறுமுகம்**



**தேவன்**

யாழ்ப்பாணம்

எமது கழகத்தால் நடாத்தப்படவுள்ள மேற்படி போட்டிகளுக்குத் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். கவிதை, பேச்சு ஆகிய இரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு இவ்வாண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்கப் பதக்கங்கள் பரிசில்களாக வழங்கப்படும். அத்தோடு அவர்கள் தகுதிகண்டு, கம்பன் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.

★ உடன் தரப்படும் தலைப்பில் பேசவும், கவிதை ஆக்கவும் தகுதியுள்ள முப்பத்தைந்து (35) வயதுக்குட்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

★ போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா இருபத்தைந்து (25/-) செலுத்தி கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் — பூபாலசிங்கம் புத்தகசாலை
சுன்னாகம் — தனலக்சுமி புத்தகசாலை
நெல்லியடி — சிவசக்தி ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை வீதி
சாவகச்சேரி — சிவம் மெடிக்கல்ஸ், கச்சாய் வீதி

★ விண்ணப்பங்கள் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அனுப்பவேண்டிய முகவரி:

போட்டி இணைப்பாளர்,
அகில இலங்கை கம்பன் கழகம்
**"கம்பன் கோட்டம்"**
800, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**விண்ணப்ப முடிவு திகதி 1993 பெப்ரவரி 15**

"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"

தி. திருநந்தகுமார் — தலைவர்
ஆறு. திருமுருகன் — போட்டி இணைப்பாளர்
க. குமாரதாசன் — செயலர்

[சி-5760]

---

செய்யப்பட்டது. (22)

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இயங்கும் புங்குடுதீவு பாரதி சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் திரு சி. பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. ந. சிறிஸ்கந்தராஜா, உபதலைவர் திரு. வ. செல்வராஜா, செயலாளர் திரு பி. த. திருநாவுக்கரசு, உபசெயலாளர் திரு வ. இரத்தினசிங்கம், இணைப்பொருளாளர்கள் திரு. ப. அருணகிரிநாதன் திரு. சி. பரமலிங்கம் ஆகியோருடன் ஆறுபேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. [22]

---

1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - பலாலி முகாமிலிருந்து குப்பிளான் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

மதனி [கமலநாயகி செல்வராசா - ஆலையடி வீதி, வந்தாறுமூலை - மட்டக்களப்பு]

1992 ஆம் ஆண்டு வவுனியா, புளியங்குளம் - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ஜெசிந்தன் / நாவுக்கரசன் (துரைராசா கௌரிசங்கர் - மன்னார் வீதி, வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5756]

---

## சனசமூக நிலையங்களின் உப சமாசங்கள், சமாசங்கள், சம்மேளனங்கள் ஆகியவற்றின்

# நிர்வாகிகள் தெரிவு-1993

கீழ்க்காணும் அடிப்படையில் இத்தேர்தல்கள் இடம் பெறும்:

| திகதியும் நேரமும் | தேர்தல்கள் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 01. 30 - 01 - 93 காலை 10.00 மணி. | உப அலுவலகங்களின் சமாசங்கள்; நகர சபைகளின் சமாசங்கள்; மாநகர சபைச் சமாசம். | சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் காரியாலயங்கள் |
| 02. 13 - 02 - 93 காலை 10.00 மணி. | வடமராட்சி தெற்கு மேற்கு; வலிகாமம் மேற்கு; வலிகாமம் தென்மேற்கு; வலிகாமம் தெற்கு; சாவகச்சேரி ஆகிய பிரதேச சபைகளின் சமாசங்கள் | சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளின் அலுவலகங்கள். |
| 03. 14 - 02 - 93 காலை 10.00 மணி. | பருத்தித்துறை; வலிகாமம் கிழக்கு; வலிகாமம் வடக்கு; நல்லூர் ஆகிய பிரதேச சபைகளின் சமாசங்கள். | சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளின் பணிமனைகள். |
| 04. 20 - 02 - 93 காலை 10.00 மணி. | சம்மேளனம். | யாழ். இந்துக் கல்லூரி. |

இத்தேர்வுகளில் 1992-ம் ஆண்டு மார்கழி மாதம் பொதுச் சபைகளைக் கூட்டிப் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்த சனசமூக நிலையங்களே மேற்படி தேர்தல்களில் பங்குபற்ற அனுமதிக்கப்படும் என்பதனைச் சனசமூக நிலையங்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(சுந்தரம் டிவகலாலா)
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 93-01-07 (சி/5737)

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

கடந்த காலம்தான், நிகழ்காலத்திற்குப் பாலம். அதைப் புறக்கணிப்பதை விடப் பெருந் தவறு வேறு இல்லை.

— அலெச்ஸான்டர் ஹெர்சன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 12-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## நல்லெண்ண சமிக்கைகள் பலவீனத்தின் அறிகுறியல்ல

இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்தவும், அதற்கென ஓர் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு யுத்த நிறுத்தம் செய்யவும் விடுதலைப் புலிகள் தயாராக உள்ளதைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். அதற்கான நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்க பல சமிக்கைகளையும் விடுதலைப் புலிகள் அனுப்பியவண்ணமுள்ளனர்.

இவற்றின் ஒரு கட்டமாக முதலில் தம்மிடம் யுத்தக் கைதிகளாக இருந்த சிறிலங்காப் பொலிசார்களது பெற்றோர்கள், உறவினர்கள் வந்து பார்வையிட அனுமதி வழங்கினர். ஆனால், சிங்கள அரசாங்கம் அதற்குத் தடை விதித்தது. பின்னர் நல்லெண்ண முயற்சியாக யாழ். வந்த பௌத்த குருமார்கள், மத குருமார்கள் ஆகியோருடன் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக வலியுறுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண தாம் தயாராக இருப்பதை வெளிக்காட்டினர்.

அதன் பின்னர் யுத்தக் கைதியாகப் பிடிக்கப்பட்டு தமது காவலில் இருந்த பொலிஸார் ஒருவரை விடுதலை செய்தனர். அடுத்த இரு தடவைகளில் ஆறு சிங்கள மீனவர்களை விடுதலை செய்தனர். தற்பொழுது அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோவின் கோரிக்கையை ஏற்று மேலும் இரு பொலிசாரை விடுதலை செய்ய தலைவர் பிரபாகரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கான நல்லெண்ண முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டுவரும் வேளையில் சிறிலங்கா அரசாங்கமோ இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு நாடுவதிலேயே தீவிர கவனம் செலுத்துவதாகத் தெரிய வருகின்றது.

அதாவது இனப் பிரச்சினையை சமாதான ரீதியில் தீர்த்து வைக்கக் கூடிய எந்த விதத் தீர்வுத் திட்டத்தையும் அரசாங்கம் முன்வைக்காததோடு, இம்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றவர்க

# தமிழருக்கு எதிரான பொருளாதாரத் தடை நீதியற்ற கொடூரச்செயல்

## வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி பிரேமாவிற்கு மகஜர்

**நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அனுப்பிய மகஜரின் முழு வடிவம்.**

யாழ்ப்பாண மாவட்ட மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு வெகுஜன அமைப்புக்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தொழிற்சங்கங்கள், ஏனைய சனசமூக அமைப்புக்கள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப் படுத்தும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளாகிய நாம் வடபகுதி மக்கள் படும் பெரும் அவலங்களையும், துயரங்களையும் தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கிறோம்.

தமிழீழ பிரதேசங்களின் தமிழ் மக்களுக்கெதிராக அர்த்தமற்ற பாரிய யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வாறான அவசியமற்ற போரினால் தமிழ் மக்கள் நாளாந்தம் மிகப் பெரிய பேரழிவை சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த முப்பத்திரண்டு மாத காலமாக தமிழ் மக்களுக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சொந்த மக்களுக்கெதிராக இவ்வாறான பொருளாதாரத் தடையை விதிப்பது மனிதாபிமானமற்ற கொடூரமான செயலாகும்.

32 மாதமாக யாழ் உணவுத் திணைக்களத்திற்கு எவ்வித உணவுப் பொருள்களும் அனுப்பி வைக்கப்படவில்லை. யாழ் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் (சி. டபிள்யூ ஈ) விமானக் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டுள்ளது. இங்கும் 32 மாத காலமாக உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருள்களைப் பெற முடியாமல் கஷ்டப்படுகிறது.

இந் நேரத்தில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் சிறு அளவிலான உணவுப் பொருள்கள் யாழ் மாவட்ட மக்களுக்கு உணவுத் தேவையில் 20 வீதம் கூட பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவில்லை.

யாழ் மாவட்ட மக்களிற்கு சராசரி வருடமொன்றுக்கு பின்வரும் அளவிலான உணவுப் பொருள்கள் தேவையென யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| அரிசி | — | 82,500 | மெற்றிக் தொன் |
| மாவு | — | 29 700 | ,, ,, |
| சீனி | — | 18 150 | ,, ,, |
| தானியவகைகள் | — | 12 375 | ,, ,, |

யாழ் மாவட்டத்தில் உணவுக் கையிருப்பு முழுமையாக முடிந்து விட்டது. கொழும்பில் இருந்து அத்தியாவசியப் உணவுப் பொருள்களைக் கொண்டு வருதற்கான பொருளாதாரத் தடை, கடல், தரை மார்க்கமான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு தடை செய்யப்பட்டு இருப்பதால் பிற மாவட்டங்களிலிருந்து கூட்டுறவுச்சங்கங்கள், தனியார் வர்த்தகர்கள் லொறிகள் மூலம் உணவுப் பொருள்களை கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொருள்களின் விலை 50 வீதம் முதல் 500 வீதம் வரை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்கள் மேலும் பாதிப்புக்குள்ளாகி பட்டினிச்சாவை எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

தொழிற்சாலைகள், தொழில் வழங்கும் நிறுவனங்கள், இராணுவ நடவடிக்கை, இராணுவ

ப்பினை இழந்து எவ்வித வருமானமுமின்றி நிர்க்கதியாகியுள்ளனர். இவர்களால் எப்படி அதிக விலை கொடுத்து பொருள்களை வாங்கமுடியும் உதாரணமாக சில பொருள்களின் விலை வித்தியாசங்களை தருகின்றோம்.

| பொருள்கள் | கொழும்பு விலை | யாழ். மாவட்ட விலை |
|---|---|---|
| நாட்டரிசி | 18. 00 | 46 00 |
| வெள். பச்சைஅரிசி | 15. 50 | 34. 00 |
| மாவு | 11. 30 | 26. 00 |
| மண்ணெய் | 10. 00 | 210 00 |
| தேங். எண்ணெய் | 45. 00 | 155. 00 |
| பருப்பு | 55 00 | 110. 00 |
| தீபெட்டி | 1. 00 | 6. 00 |

ஆதலால் பொருளாதாரத் தடையை நீக்கி எமது மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யக் கூடியளவு தாராளமாக அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பி வைத்து பட்டினிச் சாவிலிருந்து எமது மக்களைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறோம்.

யாழ் குடா மக்களின் ஒரேயொரு தரை மார்க்கமான போக்குவரத்து பாதை ஆனையிறவு ஆகும். இப்பாதை 1990 யூன் மாதம் 10 ஆம் திகதி யுத்தம் தொடங்கியவுடன் மூடப்பட்டுவிட்டது. இதனால் எமது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பயங்கரமானவையாகும். அதன் பின்னர் கொம்படி, ஊரியான், கிளாலி, பூநகரி கடல் நீரேரி ஊடாக பிரயாணம் செய்ய வேண்டியேற்பட்டது. போக்குவரத்துக் கஷ்டம் காரணமாக ஒரு தனிமனிதன் எவ்வளவு பாதிப்புக்கு உள்ளாவான் என்பது தாங்கள் அறிந்ததே முப்படைகளின் அட்டூழியங்கள், அடாவடித்தனங்களுக்கு மத்தியில் வேறுவழியின்றி கடல்நீரேரி ஊடாகப் பிரயாணம் செய்ய வேண்டிய தேவையேற்பட்டது

02-01-93 அன்று கிளாலி கடற்பரப்பில் பிரயாணம் செய்தது அப்பாவிப் பொதுமக்கள் என அறிந்திருந்தும் கடற்படையினர் வெறியாட்டம் ஆடி சுட்டும், வெட்டியும் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்களைப் படுகொலை செய்துள்ளனர். இது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றி எமது மக்கள் சுதந்திரமாகப் பிரயாணம் செய்ய பூநகரி - சங்குப்பிட்டி கடல் மார்க்கமான பாதையை போக்குவரத்திற்காகத் திறந்து விட்டு, பாதிப்புக்குள்ளான எமது மக்களின் துன்பங்களை நீக்குமாறு வேண்டுகிறோம்.

இன்று யாழ். குடாவில் தினம்தினம் இராணுவ நடவடிக்கைகள் என்ற போர்வையில் முப்படைகளின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன. மக்கள் செறிந்து வாழ்கின்ற குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல், குண்டு வீச்சு விமானத்திலிருந்து குண்டுகளைப் போடுதல், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல் தொடர்கின்றன.

இராணுவ அட்டூழியங்கள், இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக எண்பத்திரண்டாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், வதிவிடம், தொழில் வாய்ப்புக்கள்

தின் முன்னால் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக இப்படியானதொரு கொடூரமான இராணுவ அவர்த்தங்களையும், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விடுவது மனிதாபிமானமற்ற. மிகமிக அநாகரிகமான செயலாகும். பல்வேறு பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்கள் இப்போது அமைதி, சமாதானம் என்பனவற்றை வேண்டி நிற்கின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், வசதிகள் எதுவும்செய்து கொடுக்கப்படாததால் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது தென் இலங்கையில் நவீன கம்பியூட்டர் முறையிலான தொலைக்காட்சிக் கல்வி புகுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு குறைந்தளவிலான உபகரணங்கள் கூட கிடைக்கவில்லை யாழ். பல்கலைக்கழக கல்வி மேம்பாட்டுக்கான

வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் கொடுத்த உபகரணங்களை எடுத்து வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மறுத்துவிட்டது. இதன் மூலம் எமது மாணவர்களின கல்வி திட்டமிட்டு பாழடிக்கப்படுகிறது

மருத்துவ வசதி இன்மையாலும் போஷாக்கின்மையாலும் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களின் உயிர் இழப்புக்கள் அதிகரித்து வருகின்றன.

உணவு உற்பத்திக்கு தேவையான உபகரணங்கள் விளைபொருள்கள் முப்படைகளின் தாக்குதல்களினால் வீடுகளை இழந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் வீட்டை செப்பனிட்டு குடியிருக்க கட்டிடப் பொருள்கள் இலாது மிகவும் கஷ்டம் அடைகின்றனர் ஆதலால் உணவு. உறைவிடம், கல்வி. சுகாதார மருத்துவம் இவற்றுக்கு தேவையான உபகரணங்கள், பொருள்கள் எவ்வித தடுப்பாடுமின்றி அனுப்பிவைத்து கல்வி அற்று, நோயுற்று, வீடற்று இருக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தங்களின் பெரும் கடமையாகும்.

எனவே மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் பின்வரும் ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

கோரிக்கைகள்

1. தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்டுவரும் இராணுவ அழுத்தங்களையும், பொருளாதாரத் தடைகளையும் நீக்கி அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பிவைத்து ஏனைய பிற மாவட்டங்களில் விற்பனை செய்யப்படும் விலைக்கே கிடைக்கச் செய்யவேண்டும்.
2. யாழ் குடா மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய பிற, மாவட்டங்களுக்குசெல்வதற்கான சகலகடல் தரை மார்க்கமான போக்கு வரத்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றி மனிதாபிமான ரீதியில் கடல் மார்க்கமான பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை போக்குவரத்திற்காக திறந்து விட வேண்டும்,
3. தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய இராணுவ அழுத்தங்கள் அர்த்தமற்ற யுத்தத்தை உடனடியாக நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.
4. சாதாரண ஒருதனி மனிதனுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உறைவிடம், கல்வி, சுகாதாரம் மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான

பட்டு தமது காவலில் இருந்த பொலிஸார் ஒருவரை விடுதலை செய்தனர். அடுத்த இரு தடவைகளில் ஆறு சிங்கள மீனவர்களை விடுதலை செய்தனர். தற்பொழுது அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோவின் கோரிக்கையை ஏற்று மேலும் இரு பொலிசாரை விடுதலை செய்ய தலைவர் பிரபாகரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கான நல்லெண்ண முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டுவரும் வேளையில் சிறிலங்கா அரசாங்கமோ இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு நாடுவதிலேயே தீவிர கவனம் செலுத்துவதாகத் தெரிய வருகின்றது.

அதாவது இனப் பிரச்சினையை சமாதான ரீதியில் தீர்த்து வைக்கக் கூடிய எந்த விதத் தீர்வுத் திட்டத்தையும் அரசாங்கம் முன் வைக்காததோடு, இம்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றவர்களின் முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போடுவதிலேயே அக்கறையாகவும் உள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து தொடர்ந்தும் நவீன போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதும், அதன் மூலம் நவீனமயப்படும் இராணுவத்தைக் கொண்டு போர் வெற்றிகளை இலகுவாகப் பெற்று இனப்பிரச்சினையை இராணுவரீதியில் தீர்த்துவிடலாம் எனவும் எண்ணுகின்றது. இந்த எண்ணத்தின் பிரகாரமே புதிய போர் விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும், யுத்த டாங்கிகளையும் கொள்வனவு செய்வதில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அதாவது கடந்த வருடத்தில் தனது இலக்கை அடையத்தவறிய இராணுவத்திற்கு நவீன தளபாடங்களை வழங்குவதன் மூலம் தென்பூட்ட அரசாங்கம் விரும்புகின்றது. கடந்த வருட தோல்விகளினால், மனம் உடைந்து போயுள்ள இராணுவத் தலைமையும் அரசாங்கத்தின் இத் திட்டத்தைப் பெரிதும் வரவேற்றுள்ளது.

ஆனால், அரசாங்கமும், சிங்கள இராணுவமும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். 1991 ஆம் ஆண்டின் இறுதியில் இராணுவத்தினரின் கை ஓங்கியிருந்ததாக இராணுவத் தரப்பும், அரசாங்கமும், கருதிய வேளையிலும் 1992 ஆம் ஆண்டில் இராணுவம் பல தோல்விகளைச் சந்தித்து, விடுதலைப் புலிகளின் கை ஓங்கியிருந்த நிலையிலும் சரி இனப்பிரச்சினைக்கு ஏற்புடைய ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து விடுதலைப் புலிகள் மாறவில்லை, சமாதானத்திற்கான தமது ஒத்துழைப்பைக் கைவிடவில்லை.

அதாவது விடுதலைப் புலிகள் இராணுவத்திற்கு அஞ்சி இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம் எனத் தெரிவிக்கவில்லை என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம். அதாவது அவர்கள் இனப்பிரச்சினைக்கு ஓர் நீதியான தீர்வு காணவே விரும்புகிறார்கள். இதைச் சிறிலங்கா அரசாங்கம் தப்பாகக் கணிப்பீடு செய்து இராணுவ ரீதியான அணுகுமுறையையே தொடர்ந்தும் கடைப்பிடிக்குமானால், அதற்காகப் பின்னர் வருந்தியும் பயனில்லாது போய்விடும்.

பர் தெரிவித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| அரிசி | — | 82,500 | மெற்றிக் தொன் |
| மாவு | — | 29 700 | ,, ,, |
| சீனி | — | 18 150 | ,, ,, |
| தானியவகைகள் | — | 12 375 | ,, ,, |

யாழ் மாவட்டத்தில் உணவுக் கையிருப்பு முழுமையாக முடிந்து விட்டது. கொழும்பில் இருந்து அத்தியாவசியப் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கான பொருளாதாரத் தடை, கடல், தரை மார்க்கமான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு தடை செய்யப்பட்டு இருப்பதால் பிற மாவட்டங்களிலிருந்து கூட்டுறவுச்சங்கங்கள், தனியார் வர்த்தகர்கள் லொறிகள் மூலம் உணவுப் பொருள்களை கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொருள்களின் விலை 50 வீதம் முதல் 500 வீதம் வரை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்கள் மேலும் பாதிப்புக்குள்ளாகி பட்டினிச்சாவை எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

தொழிற்சாலைகள், தொழில் வழங்கும் நிறுவனங்கள், இராணுவ நடவடிக்கை, இராணுவ ஆக்கிரமிப்பு, கண்மூடித்தனமான முப்படைகளின் தாக்குதல் காரணமாக அழிக்கப்பட்டுள்ளன, அல்லது மூடப்பட்டுள்ளன இதனால் இரண்டு இலட்சத்து அறுபதினாயிரம் பேர் அறவே தொழில் வாய்ப்பினை இழந்துள்ளனர். சுமார் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் பேர் அன்றாடம் கூலி வேலை செய்த தொழில் வாய்

மீறும் செயலாகும்.

ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றி எமது மக்கள் சுதந்திரமாகப் பிரயாணம் செய்ய பூநகரி - சங்குப்பிட்டி கடல் மார்க்கமான பாதையை போக்குவரத்திற்காகத் திறந்து விட்டு, பாதிப்புக்குள்ளான எமது மக்களின் துன்பங்களை நீக்குமாறு வேண்டுகிறோம்.

இன்று யாழ். குடாவில் தினம்தினம் இராணுவ நடவடிக்கைகள் என்ற போர்வையில் முப்படைகளின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன. மக்கள் செறிந்து வாழ்கின்ற குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல், குண்டு வீச்சு விமானத்திலிருந்து குண்டுகளைப் போடுதல், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல் தொடர்கின்றன.

இராணுவ அட்டூழியங்கள், இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக எண்பத்திரண்டாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், வதிவிடம், தொழில் வாய்ப்புக்கள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் மனோநிலை பாதிக்கப்பட்டு விரக்தி அடைந்துள்ளனர். இவர்கள் மனிதாபிமான ரீதியில் கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

உயர்ந்த நாகரிகமுள்ள மனித சமுதாயத்

பொருள்களை அனுப்பிவைத்து ஏனைய பிற மாவட்டங்களில் விற்பனை செய்யப்படும் விலைக்கே கிடைக்கச் செய்யவேண்டும்.

2. யாழ் குடா மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய பிற, மாவட்டங்களுக்குச்செல்வதற்கான சகலகடல் தரை மார்க்கமான போக்கு வரத்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றி மனிதாபிமான ரீதியில் கடல் மார்க்கமான பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை போக்குவரத்திற்காக திறந்து விட வேண்டும்,

3. தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய இராணுவ அழுத்தங்கள் ஒருதலைப்பட்ச யுத்தத்தை உடனடியாக நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

4. சாதாரண ஒருதனி மனிதனுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உறைவிடம், கல்வி, சுகாதாரம் மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள்களை எவ்வித கட்டுப்பாடுமில்லாமல் அனுப்பி வைக்கவேண்டும்.

5 அப்பாவிப் பொது மக்களை சுட்டும், வெட்டியும், குண்டு வீசியும் படுகொலை செய்யும் இராணுவ அட்டூழியங்களை நிறுத்த வேண்டும்.

## தமிழில் ஆராதனை நடத்த முடியாமைக்கு வருந்துகிறேன்

### அங்கிலிக்கன் ஆயர் கென்னத்பெர்னாண்டோ

யாழ்ப்பாணம்)

இம்முறை தமிழில் ஆராதனை நடத்த முடியாதிருப்பதையிட்டு மனம் வருந்துகின்றேன். இனி ஒவ்வொரு வருடமும் இங்கு வருவேன். அடுத்தமுறை இங்கு வரும்போது நிச்சயமாக தமிழ் மொழியில் ஆராதனை நடத்துவேன் என்று அங்கிலிகன் ஆயர் அதி வண. கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார். பரியோவான் ஆலயத்தின் ஜுப்பிலி மண்டபத்தில் வழங்கப்பட்ட விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்;

தமிழ் மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளிப்பதாவும, நீதியும், நேர்மையும் வெல்லும என்றும தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய அதிவண. டி. டபிள்யூ. ஜெயகுலராஜா தமது உரையில கடலின நிறம்நீலம் தான் ஆனாலும் தாங்கள் வருவதற்கு ஒரு சில நாட்களின் முன்பாக அது கூட செங்கடலாக மாறியது எமது மக்கள் பல தடவைகளில் படுகொலை செய்யபபட்டுள்ளனர். மிக விரைவில் எமது சுயநிர்ணய உரிமை வெலலப்படடாக வேண்டும் எனறும் கேட்டுக்கொண்டார்.

## பொத்துவிலில் சுவிஸ் பிரஜை சுடப்பட்டுக் காயம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் அதிரடிப் படை முகாமுக்கு சமீபமாக காரில் சென்று கொண்டிருந்த சுவிஸ் பிரஜை ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்

அதிரடிப்படையினரின் சோதனைச் சாவடியில் அவர் பயணம் செய்து கொண்டிருந்த 16 சிறி டொயாட்டோ கொரல்லா கார் நிறுத்தப்படாமையினாலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக அதிரடிப் படையினர் கூறியுள்ளனர்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த சுவிஸ் பிரஜையான றோனிலா ஒன்மார் ஜோசப் முதலில் பொத்துவில் வைத்தியசாலையிலும் பின்னர் பதுளை வைத்திய சாலையிலும் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டார். இச் சம்பவம் பற்றி கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவரகத்திற்கும் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

## புதிய ஆயர்

யாழ்ப்பாண தென் இந்திய புதிய ஆயராக அதி. வண. டாக்டர் எஸ். ஜெபநேசன் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக தென்னிந்திய திருச்சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் தற்போதைய அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆதாரம் வெளிவந்துள்ளது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரால் வெளியிடப்படும் சமூக, பொருளாதார விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் [கார்த்திகை மார்கழி) உட்கட்டுமானச் சிறப்பிதழாக வெளிவந்திருக்கிறது.

'சிறந்த உட்கட்டமைப்பின் தேவையும் உட்கட்டுமானமும்' 'சமித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடச் சிதைவுகளை ஆவணப்படுத்தல்,' 'பொறியியல் மதியுரையகம்' ஆகிய கட்டுரைகளுடனும் 'தமிழீழத்தின் வீதிகள் எதிர்காலம், 'மழை நீர் வீணே கடலில் ஓடுவது தவிர்க்கப்படல் வேண்டும் ஆகிய ஆக்கங்களுடனும் இந்த சிறப்பிதழ் வெளிவந்துள்ளது

## ஒத்திவைப்பு

நல்லூர்லயன்ஸ் சழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு இன்று நடைபெறவிருந்த எயிட்ஸ் பற்றிய கருத்தரங்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட சு. க. முடிவு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் ஈடுபட சுதந்திரக் கட்சி தீர்மானித்திருப்பதாகவும் எதிரணிக் கட்சிகளோடு இணைந்து பொதுப் பட்டியலின்கீழ் வேட்பாளர்களை நிறுத்துவது குறித்து கட்சி தற்போது ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது இதேவேளை மேல் மாகாண சபைக்கான தேர்தலில் மேல் மாகாணசபையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகரா ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் போட்டியிடலாம் எனவும் தெரியவருகிற.

## கோரிக்கை நிறைவேறாவிடின் உண்ணாவிரதம் நடக்கும்

"எமது நியாயமான கோரிக்கைகள் குறுகியகாலத்தினுள் நிறைவேற்றப் படாவிட்டால் பேரவையின் தீர்மானங்களையும் எதிர்த்து உண்ணாவிரதம் மேற்கொள்ளத் தயாராக உள்ளோம்" இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரப்பீட மாணவர் அவையின் செயலாளர் தெரிவித்தார்.

எமதுதேவைகளையும் குறைபாடுகளையும் பலமுறை நிருவாகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்த போதும் அது ஆக்க பூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்க வில்லை என்றும்.

கடந்த மாதம் 5-ம் திகதி கொழும்பில் நடந்த பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும்மாணவர்களைத் திருப்திப்படுத்திபதாக இல்லை. அத்துடன் கடந்த 14ஆம் திகதி உபவேந்தரைச் சந்தித்து எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம், என்றும அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## நோட்டம்

வடமராட்சிவடக்கு-கிழக்கு கடற் பிராந்தியத்தில் சிறிலங்கா கடற்படையினர் சில மணிநேரம் நோட்டமிட்டனர்

வடமராட்சி கிழக்கு பகுதியை நோக்கிச் சென்ற கடற்படையினர் கற்கோவளம் கடலில் மீனவ தொழிலில் ஈடுபட்டிருந்த சில மீனவர்களை நோக்கிச் சுட்டனர்.

எனினும் மீனவர்கள் அப்பகுதியை விட்டு கலைந்தனர். (யோ)

ஈழநாதம்

# ஜெயலலிதாவின் சிபார்சினாலேயே வாழப்பாடிக்கு பதவி கிடைத்தது

## கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அறிக்கை

(சென்னை)

ஜெயலலிதாவின் சிபார்சினால தான் வாழப்பாடியாருக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் பதவி கிடைத்தது. அப்படியிருக்க ஜெயலலி தாவின் பெயரைச் சொல்லி அரசியல் பிழைப்பு நடத்தும் வாழப்பாடி ராமமூர்த்தி வரம்பு மீறிப் பேசலாமா? என்று தமிழக கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் அ. இ. அ. தி. மு. க. வோடு இணக்கமான போக்கை கடைப்பிடிப்பார் என்பதால் தான் எந்தவி மான விசேட தகுதியும் இல்லாத வாழப்பாடியாரை ராஜிவ்காந்தி தமிழக காங்கிரஸ் தலைவராக நியமித்ததாகவும், பலவேறு சந்தர்ப்பங்களில் வாழப்பாடியை தலைமைப் பொறுப்பில் இருந்து விடுவிக்க எடுக்கப்பட்ட முயற்சியை ஜெயலலிதாதான் தடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இதையெல்லாம் மறந்துவிட்டு வாழப்பாடி இம் மாதிரி தொடர்ந்து பேசினால் விரைவில் அவர் குப்பைத் தொட்டியில் தூக்கி வீசப்படுவார் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதாவின் செயல்கள் பண்பாடு அற்றவை

## – முன்னாள் அமைச்சர்ராஜாராம் கண்டனம்

(சென்னை)

அரசியல் கருத்து வேறுபாடுகள் எவ்வளவு இருந்தாலும் தனிப்பட்ட முறையில் அன்பும் ஆதரவுமாக ஒருவருக்கொருவர் பழகிக் கொள்ளும் தமிழ்நாட்டில், பண்பாடற்ற நாகரிகமற்றசெயலைச் செய்துள்ள ஜெயலலிதாவைக் கண்டிக்க எனக்கு வார்த்தைகளே தெரியவில்லை என்று தமிழக முன்னாள் அமைச்சரான ராஜாராம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அண்மையில் கன்னியாகுமரிக்கு விஜயம் செய்தபோது சுப்பிரமணியப் சுவாமிக்கு ஆதரவளிக்கும் நரசிம்மராவ் ஒழிக என்று அ.இ.அ.தி.மு.க வினர் கூச்சலிட்டதையும், விவேகானந்தர் விழா சிறப்புக்கூட்டத்தில் பிரதமர் பேசும்போது அ இ அ. தி-மு. க வினர் கூச்சலிட்டுக் குழப்பியதையும் சுட்டிக்காட்டியே முன்னாள் அமைச்சர் ராஜாராம் இக் கண்டன அறிக்கையை வெளியிடுள்ளார்.

# அத்வானி, ஜோஷி உட்பட 6 பேர் நேற்றுமுன்தினம் விடுதலை

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களான எல். கே அத்வானி மற்றும் முரளி மனோகர் ஜோஷி உட்படத் தடை செய்ய பட்ட அமைப்புக்களைச் சேர்ந்த ஆறு தலைவர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் நீதிமன்றக் காவல் எல்லை முடிவடைந்ததையடுத்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பபட்டபோது அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

விஷ்ணு ஹரி டால்மியா, அசோக சிங்ஹல், வினாய் கடடியார், உமாபாரதி ஆகியோர் நேற்று முன்திலம் விடுதலை செய்யப்பட்ட ஏனைய தலைவர்களாவர்.

## மாதிரி அமைப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள முதலுதவித் தொண்டர்களின் பயிற்சிக்காகவும், பார்வைக்காகவும் "மாதிரி மனித உடல் அமைப்பு" தற்பொழுது யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

O/L

பிரிவு II DAY CLASSES (8.00 - 2.00)

பிரிவு III EVENING ,, (3.15 - 6.00)

பிரிவு II SAT., SUN. ,, (8.00-3.00)

பிரிவு II ஆண்டு 6, 7, 8, 9, 10


## அரசிற்

ஆரம்பமாகியது.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உட்பட பல தரப்பட்ட மக்களும் இக் கண்டனப் பேரணியில் கலந்து கொண்டு சிறிலங்கா அரசுக்கெதிராக ஆவேசம் கொண்டு கோசம் எழுப்பினர். அரசுக்கு எதிரான பல கோசங்கள் அடங்கிய அட்டைகளையும், பதாதைகளையும் இவர்கள் தாங்கிச் சென்றனர்.

இப் பேரணி ஆரம்பத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சென்றடைந்து, அங்கு கண்டன மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டபின்னர், அங்கிருந்து ஆஸ்பத்திரிவீதியை அடைந்து யாழ் அரச செயலகத்தை சென்றடைந்தது. இப் பேரணி குறிப்பிட்ட ஒரு புள்ளியைக் கடக்க இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிக

# பொங்கல் கலை விழா

யாழ் பட்டப்படிப்புகள் கல்லூரி பேராதனை யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரி மாணவர் ஒன்றியத்தின் பொங்கல் கலை விழா பட்டப்படிப்புகள் கல்லூரியில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11. 00 மணியளவில் திரு. எம் பி. அருளானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பொங்கல் கலை விழாவில் சொற்பொழிவு, கவியரங்கம், பட்டிமண்டபம், இன்னிசை ராகங்கள் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# வீரச்சாவு



கப்டன் இராமன்

யாழ்ப்பாணம் கல்முனைப் பகுதியில் 05-01-1993 அன்று சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளி கப்டன் இராமன் (ஏரம்புமூர்த்தி டேவிட் கன்னங்குடா மட்டக்களப்பு) வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## பிரபாகரனின்

பகுதியிலும் நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் சமாதானத்திற்கான வழியை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும என்றேன்.

இதற்கு தலைவர் பிரபாகரன் எமது தரப்பில்என்னநல்லெண்ண செயலைஎதிர்பார்க்கிறீர்கள் எனக் கேட்டார்." நான் "உங்களால் யுத்தக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள சிங்கள பொலிசாரில் இருவரை விடுதலை செய்ய முடியுமா" எனக் கேட்டேன். உடனே அவர் எதுவித தயக்கமுமின்றி மிகுந்த காருணியத்துடன் தனது மனப்பூர்வமான சம்மதத்தை அளித்தார். நான் கைதிகள் அனைவரையும் பார்வையிட சந்தர்ப்பம்

## மட்டக்களப்பில்

பாண்டியன்/ சிவானந்தன் வீரசிங்கம் ரெட்ணசிங்கம் - வந்தாறுமூலை, மட்டக்களப்பு.

வீரவேங்கை அனுராதன்/ அலோசியஸ் சிவகுரு சிவகுமார்- கல்லடி. உப்போடை.

வீரவேங்கை ஜெயந்தன் கனகசிங்கம் தங்கவடிவேல்- சித்தாண்டி, முறைக்கட்டாஞ்சேனை.

வீரவேங்கை துசரூபன் தரும தாஸ் ஜீவகரன்- மெயின்வீதி, கிரான்.

வீரவேங்கை ஈழவேந்தன்/ தயான் கோபாலகிருஷ்ணன் திருஞானமூர்த்தி- தம்பிலுவில்-02, மட்டு.

வீரவேங்கை குருபரன்/ கௌதம் ஞானப்பிரகாசம் அந்தோனி- ஐயங்கேணி, ஏறாவூர்.

வீரவேங்கை திலேஸ்வரன் சதாசிவம் யோகராசா- மகிழவெட்டுவான்,ஆயித்தியமலை.

வீரவேங்கை உலகநாதன்/ கோஸ்மன் சின்னத்தம்பி கிருஷ்ணமூர்த்தி- ஏறாவூர், 05 ஆம் குறிச்சி.

வீரவேங்கை மோகன் தேவநாயகம் ரவிச்சந்திரன்- தேவபுரம், மொறக்கட்டாஞ்சேனை.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மக்கள்

கான மக்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது; அரசினால் மக்களுக்கு

## தடைகள்

தாய்-இப்போது வாழ்வையே அழிக்கிறாய்"

"அன்று எரிபொருள், மருந்து-பொருளாதாரத் தடைகள் இன்று வாழத் தடை"

"மருந்துப் பொருள்களைத் தடைசெய்ய உனக்கென்ன மனநோயா?" "எம் வளம்எம்மைக் காக்கும் நீ விட்டுச் செல்", "சிறிலங்கா அரசே, எமது மண்ணில் நாம் போகவரத் தடை செய்வதற்கு நீ யார்"

'சர்வதேச போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடுசெய்", "பேசுவதோ புத்தசீர்மம் போடுவதோ பட்டினி"

"சிறிலங்கா அரசே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்து"

"உரிமைகளை அடக்க உனக்குஉணவு ஒருகருவியா?"

"சர்வதேசமே சிறிலங்கா அரசை இனங்காண்", "அரசியல் தீர்வு ஒருபுறம், மறுபுறம் ஆயுதக் குவிப்பு", "தபால்களைத் தடை செய்யாதே"

"எறிகணை, குண்டுமாரி பொழிந்தாய் நாம் ஒய்ந்தோமா தலைசாய்ந்தோமா?"

(17 24), (22), (21)

ஏற்படும் பாதிப்புகள் அனைத்தும் எனக்குத் தெரிந்தவையே. ஏனெனில் நானும் உங்களில் ஒருவராகவே இங்கு வாழ்கிறேன். உங்களது நியாயமான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் உடனடியாக உரிய இடத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று உறுதியளித்தார்.

## அரசின்

லங்கா பொலிசை சேர்ந்த ஏ. எம் எல். பண்டார (வயது 40) தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்: விரைவில் இந்த யுத்தம் முடிவுக்கு வரும். அனைவரும் சமாதானமாகவும் சுதந்திரமாகவும் வாழும் நிலை ஏற்படும் என்றார் அடுத்து வைக்கப் பட்டுள்ள யுத்தக் கைதியான டி. எஸ். பி. பண்டார அங்கு உரையாற்றுகையில் "ஆங்கில திருச்சபை ஆயர் மற்றும் மத குருமார்களை சந்திப்பதற்கு எமக்கு சந்தர்ப்பம் வழங்கிய விடுதலைப் புலிகளுக்கும், தலைவர் பிரபாகரனிற்கும் என்றும் கடமைப்பட்டுள்ளோம். கைதிகளாக இருந்த போதிலும் எமக்கு தேவையான உணவு, உடை, மருந்து, பொழுதுபோக்கு, உடற்பயிற்சி என்பனவற்றிற்கு புலிகள் எமக்கு வசதி செய்து தந்துள்ளார்கள்", எனத் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் வீரச்சாவு



மேஜர் தவமோகன் (சதீஸ்)



கப். ராஜேந்திரன் (சேது)



2-ம் லெப். குணதாஸ்







ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ் அண்மையில் கன்னியா குமரிக்கு விஜயம் செய்தபோது சுப்பிரமணியச் சுவாமிக்கு ஆத ரவளிக்கும் நரசிம்மராவ் ஒழிக முதலு தவித் தொண்டர்களின் பயிற்சிக்காகவும், பார்வைக்கா கவும் ''மாதிரி மனித உடல் அமைப்பு'' தற்பொழுது யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

ஆண்கள், பெண்கள், சிறுவர் கள், வயோதிபர்கள் உட்பட பல தரப்பட்ட மக்களும் இக் கண்டனப் பேரணியில் கலந்து கொண்டு சிறிலங்கா அரசுக் கெதிராக ஆவேசம் கொண்டு கோசம் எழுப்பினர். அரசுக்கு எதிரான பல கோசங்கள் அடங்கிய அட்டைகளையும், பதாதைகளையும் இவர்கள் தாங்கிச் சென்றனர்.

இப் பேரணி ஆரம்பத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங் கத்தைச் சென்றடைந்து, அங்கு கண்டன மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டபின்னர். அங்கிருந்து ஆஸ்பத்திரிவீதியை அடைந்து யாழ் அரச செய லகத்தை சென்றடைந்தது. இப் பேரணி குறிப்பிட்ட ஒரு புள்ளியைக் கடக்க இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிக நேரம் எடுத்தது.

கண்டனப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் அனை வரும் செயலக முன்றலுக்குச் சென்று அரைவட்ட வியூகம் அமைத்து மறியல் செய்தனர் இதனால் அரச செயலகம் முற் றாகச் செயல் இழந்தது.

ஓம் மறியல் போராட்டத் தின் இறுதியில் சிறிலங்கா ஜனாதிபதிக்கான ஐந்து அம் சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப் பட்டது. இம் மகஜரை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா பெற் றுக் கொண்டார்.

பிரபாகரனின்

பகுதியிலும் நல்லெண்ண முய ற்சிகளை மேற்கொள்வதன் மூலம் சமாதானத்திற்கான வழியை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்க முடி யும் என்றேன்.

இதற்கு தலைவர் பிரபாக ரன்' எமது தரப்பில்என்னநல் லெண்ண செயலைஎதிர்பார்க் கிறீர்கள் எனக் கேட்டார்.'' நான் ''உங்களால் யுத் தக் கைதிகளாக வைக்கப்பட் டுள்ள சிங்கள பொலிசாரில் இருவரை விடுதலை செய்ய முடியுமா'' எனக் கேட்டேன். உடனே அவர் எதுவித தயக் கமுமின்றி மிகுந்த காருணியத் துடன் தனது மனப்பூர்வமான சம்மதத்தை அளித்தார். நான் கைதிகள் அனைவரை யும் பார்வையிட சந்தர்ப்பம் தருவீர்களா எனக் கேட்ட போது அதற்கும் அவ்வாறே சம்மதமளித்தார்.

எனது கோரிக்கைகளை ஏற்று கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்றிய தலை வர் பிரபாகரனிடம் என்றும் மதிப்பும் நன்றியும் உடைய வராவேன். நான் 13 ஆம் திகதி கொழும்பு திரும்பிய தும் சிறிலங்கா அரசிடம் இவ் இருவரையும் ஒப்படைப்பேன். தலைவர் பிரபாகரனின் காரு ணியம் மிக்க இச் செயல் எனக்கும் என்கூட வந்தவர் களுக்கும் மிகவும் மகிழ்வைத் தருகிறது என்றார்.


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**O/L**

பிரிவு II DAY CLASSES (8.00 - 2.00)

பிரிவு III EVENING ,, (3.15 - 6.00)

பிரிவு II SAT., SUN. ,, (8.00-3.00)

**பிரிவு II ஆண்டு 6, 7, 8, 9, 10**

புதிய பிரிவுகள்

**ஆரம்பம்:- 16. 01. 1993**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J R. சூரி |
| கணிதம் | — | திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — | திரு விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | — | திரு கோபி |
| தமிழ் | — | திரு. சிவா |
| சமயம் | — | திரு. கெங்கா |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன் |

(சி/5758)


## மரண அறிவித்தல்

## தினகரிப்பிள்ளை முத்துக்குமாரு

ஆவரங்கால் 10-ம் கட்டையடியைச் சேர்ந்த தினக ரிப்பிள்ளை முத்துக்குமாரு 11-01-93 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ் சென்ற சிவபாக்கியத் தின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற திருமதி சின் னத்தம்பி நாகம்மா (மலேசியா), குமாரசுவாமி (ஓய்வு பெற்ற தபால் திணைக்கள ஊழியர்), திருமதி செல்லத் துரை சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்களேஸ்வரியம்மா, பத்மாவதி, பத்மநாதன் (லண் டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவாமிநாதன் (கிராமசேவை உத்தியோகத்தர் சுதந்திரபுரம், உடை யார் கட்டு), யோகராசா, யோகமலர் (லண்டன்) ஆகி யோரின் அன்பு மாமனாரும், பத்மயோகனின் அன்புப் பேரனும், வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை (முன்னை நாள் விவசாய உதவி ஆணையாளர் கொழும்பு) யின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல் லத்தில் 11-01-93 திங்கட்கிழமை நடைபெற்றது, இவ் வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

[3980] கா. யோகராசா


வெளிவந்துவிட்டது தை-பங்குனி

# மாற்றம்

(3985)

மக்கள் சஞ்சிகை விலை 10/-


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 11.01.1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 796.

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

40-1188, 41-8432, 41-9855, 42-1722.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-2295, 24-4504, 26-3177, 43-2524, 28-0882, 26-6461, 26-4139, 40-1737, 24-6293, 24-5036, 41-5015, 24 5015, 24-4153, 42-0728, 26-6933, 24-5958, 26-2414, 41-6177, 27-1939, 26-1735, 24-1205, 40 8035, 41-9652, 43-3615.



மேஜர் தவமோகன் (சதீஸ்)



கப். ராஜேந்திரன் (சேது)



2-ம் லெப். குணதாஸ்



2-ம் லெப்டினன்ட் சோபாண்டியன் (சிவானந்தன்)



வீரவேங்கை அனுராதன் [அலோசியஸ்]



வீரவேங்கை ஜெயந்தன்



வீரவேங்கை [தில்லேஸ்வரன்



வீரவேங்கை துசரூபன்



வீரவேங்கை உலகநாதன் [கோஸ்மன்]



வீரவேங்கை ஈழவேந்தன் (தயான்)



வீரவேங்கை குருபரன் (கௌதம்)

வீரவேங்கை மோகன்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதப்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.